முச்சந்தி முரளி



"வேலியில போன ஈரானை வேட்டிக்க விட்டிட்டு அந்தரப்படப்போயினம் பாருங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 88

வியாழக்கிழமை
22 பெப்ரவரி 2024

மாசி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# மாகாணப் பொலிஸ் அதிகாரம்; நீக்குவதற்கு நேற்றுச் சட்டவரைவு!



## நாடாளுமன்றில் சமர்ப்பித்தார் உதயகம்மன்பில

**கொழும்பு, பெப்ரவரி 22**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக நீக்கக் கோரும், அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்று முன் வைக்கப்பட்டுள்ளது.**

☞ 11

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை?

கொழும்பு, பெப்.22

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் உயர்நீதிமன்றப் பரிந்துரைக்கு புறம்பாகவே நிறைவேற்றப்பட்டுள்ளது. அதை நிவர்த்தி செய்வதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்காவிட்டால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன் வைக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ தெரிவித்தார்.

☞ 11

### கொக்குத்தொடுவாய்

## மனிதப் புதைகுழி வழக்கு இன்று

யாழ்ப்பாணம், பெப்.22

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு இன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

மனிதப்புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகள் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும்

☞ 11

## சிறார்கள், பெண்களுக்கு புலிகள் பெரும் பாதுகாப்பு

### நாடாளுமன்றில் நினைவூட்டிய சார்ள்ஸ் எம்.பி.

கொழும்பு, பெப்.22

2009ஆம் ஆண்டுவரை எமது பகுதியில் சிறார்களுக்கும், பெண்களுக்கும் மிகப்பெரிய பாதுகாப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தனர். புலிகளின் தண்டனை அணுகுமுறை எமது பகுதியை குற்றமற்ற பிரதேச

☞ 11

## ஈரான் அதிபருக்கு இலங்கை அழைப்பு

### இன்னொரு சர்ச்சைக்கு அடித்தளம்

கொழும்பு, பெப்.22

இலங்கைக்கான அதிகார பூர்வ பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று ஈரான் ஜனாதிபதி இப்ராஹீம் ரையீஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அதிகார பூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி இப்ராஹீம் ரையீஸி தலைநகர் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளும் அழைப்பு தமக்குக் கிடைத்துள்ளது என்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்

☞ 11

## கொரோனாத் தடுப்பூசியால் இருதயம், மூளை பாதிப்பு

### உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வில் அதிர்ச்சி

கொழும்பு, பெப்.22

கொரோனாத் தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு இருதயம், மூளை ஆகியவற்றில் பாதிப்புகள் ஏற்படலாம் என்று சர்வதேசரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம்

☞ 11

### இனந்தெரியாத கும்பலால்

## மோ. சைக்கிள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், பெப்.22

காரைநகர், ஆலடியில் மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

☞ 11

## பலாலி விமான நிலையத்தில் மடக்கப்பட்டார் சந்தேகநபர்!

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணத்தில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் பலதுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் ஒருவர் பலாலி சர்வதேச விமான நிலையத்தில்

☞ 11

அதிர்ச்சி தரும்

## வரி அதிகரிப்பு

பக்.02

### பாக்குநீரிணையைக் கடந்து

## சாதனை படைப்பதற்கு தயாராகும் யாழ். சிறுவன்



யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் ஹரிகரன் தன்வந்த் எதிர்வரும் முதலாம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சியை முன்னெடுக்கவுள்ளார்.

இந்தியாவின் தனுஷ்கோடியில் இருந்து அதிகாலை 12.05 மணிக்கு நீச்சலை ஆரம்பித்து, மதியம் தலைமன்னார், பியர் பகுதியில் நீச்சலை நிறைவு செய்யத் திட்டமிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

☞ 11

## யாழ். பல்கலை மாணவனின் உயிரைப் பறித்தது நாய்!



யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர் ஒருவர் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த ரமேஷ் சகீந்தன் (வயது-22) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலைப்பீட முதலாம் வருட மாணவராவார். ஊரெழு றோயல் கழக உதைபந்தாட்ட அணியின் பிரபல வீரராவார்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில், சிறுப்பிட்டிப் பகுதியில் விபத்து நடந்துள்ளது. இவர் பயணித்த

☞ 11

## கச்சதீவுத் திருவிழா; தமிழகத்தில் குழப்பம்

சென்னை, பெப். 22

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாப் பயணத்தை இரத்துச் செய்வதாக கச்சதீவு புனித பயண ஒருங்கிணைப்பாளர் வேர்க்கோடு பங்குத் தந்தை சந்தியாகு தெரிவித்துள்ளார்.

விசைப்படகு கடற்றொழிலாளர்களின் தொடர்வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக இந்த விழாவில் இந்திய பக்தர்கள் யாரும் கலந்துகொள்ளவில்லை

☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைமையில் கசிப்பு; 25,000 ரூபா தண்டம்



யாழ்ப்பாணம், பெப்.22
கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், கடும் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

மானிப்பாய்ப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆனைக்கோட்டைப் பகுதியில் வைத்து சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 40 வயதான சந்தேகநபரிடம் இருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், கடும் எச்சரிக்கையும் விடுத்துள்ளது. (எ-125)

# உடைமையில் கஞ்சா 14 நாள்கள் மறியல்

யாழ்ப்பாணம், பெப்.22
உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பலாலிப் பகுதியில் வைத்து சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 24 வயதான சந்தேகநபரிடம் இருந்து 255 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-125)

# அமெரிக்காவுடன் முறுகும் இலங்கை



கொழும்பு, பெப். 22
இலங்கை அமெரிக்காவின் பிராந்தியமல்ல. இறையாண்மையுடைய சுயாதீனமான எமது நாட்டின் நாடாளுமன்றத்துக்கு மாத்திரமே, சட்டவாக்கம் தொடர்பான உரிமையும் காணப்படுகிறது என அரசாங்கம் அமெரிக்கத் தூதுவருக்குப் பதிலளித்துள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் கவலை வெளியிடுவதாக ஊடகப் பிரதானிகள், ஊடகவியலாளர் மற்றும் சிவில் சமூக அமைப்பினருடனான சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்திருந்தார். இது தொடர்பிலேயே அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். (ஒ-இ)

விபத்தை ஏற்படுத்திய

# தனியார் பேருந்தின் அனுமதி இரத்து

யாழ்ப்பாணம், பெப். 22

**அனலைதீவில் கடந்த திங்கட்கிழமை பெண் ஒருவர் விபத்தில் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் பேருந்தின் வழித்தட அனுமதி வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.**

780 இலக்க தனியார் பேருந்தில் பயணித்த பெண் இறங்குவதற்கு முன்னரே பேருந்து இயக்கப்பட்டதால் அவர் வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்திருந்தார்.

இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸின் அறிவுறுத்தலுக்கு அமைவாக முதல்கட்ட விசாரணைகளை முன்னெடுத்த வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை, பேருந்தின் வழித்தட அனுமதியை இரத்துச் செய்துள்ளது.

போட்டிக்கு பேருந்துகளை ஓடுவதனாலேயே இவ்வாறான விபத்துகள் ஏற்படுகின்றன. இது தொடர்பாக பொதுமக்கள் உடனடியாக வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபைக்குத் தெரியப்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். (ஒ-5)

# வரி அதிகரிப்பு

சென்னை, பெப். 22
அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சோளம், உளுந்து, பச்சைப்பயறு, கௌப்பி மற்றும் குரக்கன் ஆகியவற்றின் இறக்குமதியை விவசாய அமைச்சின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளவேண்டுமென வர்த்தமானி அறிவித்தலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரிசி கிலோ ஒன்றுக்கு 200 ரூபாவாக இருந்த விசேட வர்த்தக வரி 300 ரூபாவாகவும், கௌப்பி மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கு கிலோவுக்கு 70 ரூபாவாக இருந்த விசேட வர்த்தக வரி 300 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ சோளத்துக்கு 25 ரூபா வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (ஒ-இ)

# உரிய காலத்தில் தேர்தல் நடக்கும்

## அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 22
ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடைபெறும் என அரசாங்கம் நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தியுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றும் போதே அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா இந்தத் தகவலை வெளியிட்டார்.

'எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப் பகுதியில் நடைபெறும். ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் நடத்தாதென்றும், சர்வஜனவாக்கெடுப்பொன்றை நடத்தத் திட்டமிடுவதாகவும் கூறுகின்றனர். அவ்வாறெனின் ஏன் எதிர்க்கட்சிகள் தேர்தலுக்குத் தயாராகின்றன என கேள்வியெழுப்பவேண்டியுள்ளது. நான் பொறுப்புடன் கூறுகிறேன், உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுக் காட்டுமாறு எதிர்க்கட்சிகளுக்கு சவாலும் விடுகிறேன்' - என்றார். (ஒ-இ)

## 'கோத்தா கோ கம'வில்

# சூதாட்ட விடுதி?

கொழும்பு, பெப். 22
காலிமுகத்திடலில் 'அரகலய' போராட்டம் நடைபெற்ற இடத்தை - 'கோத்தா கோ கமவை' சூதாட்ட விடுதியாக மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார். இதனை மறுத்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய சூதாட்ட விடுதியை ஆரம்பிப்பது இலகுவான விடயமல்ல, என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

## இயேசுவின் சாயலை வாழ்வாக்குவோம்




அதிகாலையில் காந்தி அடிகளின் சமர்பதி ஆசிரமத்தில் திருடன் ஒருவன் பிடிபட்டான். ஆச்சிரம ஊழியர்கள் அவனைத் தாக்கி ஒரு மரத்தில் கட்டிவைத்தனர். நண்பகல் செபத்தை முடித்ததும் காந்தியிடம் நடந்ததைக் கூறினர். காந்தி உடனே அவனுக்கு உணவுகொடுத்தீர்களா? என்று கேட்டார். இல்லை திருடனுக்கு என்ன உணவா? என்றனர். ஆம் திருடனுக்கும் வயிறுண்டு பசியுண்டு - என்றார் காந்தி.

அன்பும் கருணையும் நன்றியுணர்வும் பூத்துக்குலுங்கும் மனங்களில் தான் மன்னிக்கும் மனோபாவம் மணம் பரப்பும். முடக்குவாதக்காரனின் பாவத்தை மன்னித்து வேதனையின் வேர்களைத் தேடி நோய் நாடி நோய் முதல் நாடி அதை விலக்குவதன் வழியாக குணமாக்கிறார் இயேசு.

பாவம் தான் நோயின் ஊற்று என்பது யூத மரபு. அந்த மரபை பட்டைதீட்டி அன்பின்வழி மன்னிப்பு என்ற புதிய மரபை இயேசு சுடர்விடச் செய்தார். பாவம் என்பது கடவுளுக்குச் செலுத்த வேண்டிய கடன். பாவ மன்னிப்பு என்பது கடன் தள்ளுபடி கடந்த கால சுமையை அகற்றுவது மன்னிப்பு. மன்னிப்பில் மலர்வது மகிழ்ச்சி மன்னிக்கும் மனம் தெய்வத்தின் சீதனம் என்பதைப் புரிந்துகொள்வோம். மன்னிப்பு மனஇறுக்கத்தையும் இரத்த அழுத்தத்தையும் உடல் நலத்தையும் வழங்கும் அருமருந்தாகும். இறுதி வரை மன்னித்த இயேசுவின் சாயலை எமது வாழ்வாக்குவோம்.

**யே.சுபீட்சன்**, கொழும்புத்துறை

# விபத்தை ஏற்படுத்திய சுற்றுலாவிக்கு தண்டம்!

2023ஆம் ஆண்டு ரஷ்ய சுற்றுலாவி பயணித்த கார் புகையிரதத்துடன் மோதிய விபத்தில் 1.78 மில்லியன் ரூபா பணத்தைச் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விபத்தில் ரயிலுக்கும் சமிக்ஞை விளக்குக்கும் ஏற்பட்ட சேதத்துக்காக 1.78 மில்லியன் ரூபா பணத்தை இழப்பீடாகவும், போக்குவரத்து விதிமுறைகளை மீறியமைக்காக 56 ஆயிரம் ரூபா தண்டமாகவும் செலுத்துமாறு காலி பதில் நீதிவான் பணித்துள்ளார். (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வுக்கு தற்காலிகத் தடை

**முல்லைத்தீவு, பெப். 22**

**ஆற்றில் போதியளவு மணல் நிரம்பும்வரை வசந்தபுரம் - பேராற்றுப் பகுதியில் மணல் அகழ்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

வசந்தபுரம் பேராற்றை அண்டிய பகுதியில் இடம்பெற்றுவரும் மணல் அகழ்வை உடனடியாக இரத்துச் செய்யக்கோரி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், கடந்த ஜனவரி 29 ஆம் திகதி மாவட்டச் செயலருக்கும் திணைக்களப் பிரதிநிதிகளுக்கும் கடிதம் அனுப்பி வைத்திருந்தார். அந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் ஆராயப்பட்டது. துறைசார் அதிகாரிகள் களப்பயணம் மேற்கொண்டு முடிவெடுப்பதாக ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

கனியவளத் திணைக்களத்தினர், பிரதேச செயலக அதிகாரிகள், பொலிஸார், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், கமநல சேவைத் திணைக்களத்தினர், கிராம அலுவலர், சுற்றுச்சூழல் அதிகாரசபையின் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் கள ஆய்வை மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஆறு ஆழமாகக் காணப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த ஆற்றில் மணல் இல்லாத நிலையும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. ஆற்றில் போதியளவு மணல் நிரம்பும்வரை மணல் அகழ்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆவணி மாதத்தில் மீண்டும் களப்பயணம் மேற்கொண்டு மணல் அகழ்வுக்கான அனுமதி தொடர்பில் பரிசீலிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-19)



வலிகாமம் உள்ளிட்ட யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் பெரும்போக புகையிலைச் செய்கையை விவசாயிகள் மேற்கொண்டிருந்த நிலையில் தற்போது இணுவில் பகுதியில் புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளது. (ப-66)

## படகுச் சேவை வரி குறைப்பு!

பயணிகள் போக்குவரத்து படகு மற்றும் சுற்றுலாக் கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் பயணிகளிடமிருந்து அறவிடப்படும் வெளிச்செல்லல் வரியை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்துப் படகுகள் மற்றும் கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் பயணிகளிடமிருந்து தற்போது அறவிடப்படும் வெளிச்செல்லல் வரியை 5 அமெரிக்க டொலராகக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கை இடையிலான படகுப் பயணி ஒருவருக்கு 60 கிலோ வரையான பயணப் பொதிகளுக்கான கட்டணத்தை விலக்களிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச் சரவைப் பேச்சாளர் பந்துல குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## இளைஞனைத் தாக்கி மோ.சைக்கிள் கொள்ளை!

யாழ்ப்பாணம், பெப். 22

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞனை வழிமறித்த கும்பல் அவரைத் தாக்கிவிட்டு மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் ஏ-9 வீதி அரியாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி நோக்கி 'வெகோ' மோட்டார் சைக்கிளில் இளைஞன் பயணித்துக் கொண்டிருந்தபோது ஒரு கும்பல் வழிமறித்துள்ளது. மோட்டார் சைக்கிளை நிறுத்தியவுடன் இளைஞன் மீது சரமாரியான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலில் இருந்து தப்பிக்க இளைஞன் ஓட முற்பட்டபோது, மோட்டார் சைக்கிளை கும்பல் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. (ஒ-100)

## விற்பனை நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது

முல்லைத்தீவு, பெப். 22

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் தேசிய லொத்தர் சபையின் முகவர் ஒருவர், லொத்தர் விற்பனையில் ஈடுபட்டு வந்த நிலையில் சில விஷமிகளால் லொத்தர் நிலையம் கடந்த திங்கட்கிழமை இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. (ப-19)

## நெடுந்தீவு இறங்குதுறை புனரமைப்புப் பணி கடற்படையினரிடம்

யாழ்ப்பாணம், பெப். 22

நெடுந்தீவு இறக்குதுறையை புனரமைக்கும் பணியை கடற்படையிடம் ஒப்படைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இறங்குதுறையை புனர்நிர்மாணம் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமா? அல்லது வீதி அபிவிருத்தி திணைக்களத்திடமா? கையளிப்பது என்பது குறித்து கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், "தீவகம் சார்ந்த போக்குவரத்து உட்பட பல நிறைவுறுத்த வேண்டிய பணிகள் உள்ளமையால் இதனை முன்னெடுப்பது கடினம்" என்று தெரிவித்தனர்.

அதேவேளை வேறு நிறுவனங்களும் இந்தப் பணியை மேற்கொள்ள முன்வராத நிலையில், ஜனாதிபதியிடம் அனுமதி பெற்று இறங்குதுறை புனரமைப்புப் பணியை குறைந்த செலவில் விரைந்து முடிப்பதற்கு கடற்படையினரை நாட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-125)

## ப தினம் தெரியுமோ?

**க**ல்லிலே கலைவண்ணம் கண்ட தமிழன் இப்ப கள்ளில கலை வண்ணம் கண்டு 'கல்லா கட்டுற' காலமாப் போட்டுது. என்னதான் ஆயிரத்தெட்டு சாராயங்கள் இருந்தாலும், 'குடிமக்களுக்கு' எப்பவும் கள்ளெண்டால் தனிக்கலை. மற்றச் சாராயங்கள் மாதிரி கள்ளால உடம்புக்குக் கெடுதல் குறைவெண்டு சொல்லி, முட்டி முட்டியா கள்ளுக் குடிச்சே காலத்தைக் கழிக்கிறவையும் இருக்கினம். ஆனால் என்னதான் கள்ளுக்கு மவுசு இருந்தாலும், அதைச் சீவிறவைக்கு அதுக்குரிய காசு முழுசாக் கிடைக்கிறதில்லை. கஷ்டப்பட்டு அவை மரத்தில ஏறி கள்ளிறக்கினாலும், நோகாமல் நொங்கு குடிச்சிட்டு லட்சக்கணக்கில காசு உழைக்கிறது வேற ஆக்கள்தான். அப்பிடி ஒரு சம்பவம் இப்ப நடந்திருக்குது.

சீசன் காலத்தில கள்ளு கூடுதலா வரும். அதால விக்காமல் மிஞ்சுறதும் உண்டு. அப்பிடி கூடுதலாக் கள்ளுக்கிடைக்கிற காலத்தில அதைப் பதப்படுத்தி, போத்தில்ல அடைச்சு பிறகு கள்ளுத்தட்டுப்பாட்டுக் காலத்தில விக்கிறவை. இப்பிடிப் போத்தல் கள்ளு விக்கிறதால கள்ளுக்கும் தட்டுப்பாடு இல்லை. கள்ளுச் சங்கங்களுக்கும் லாபம் அள்ளிக்கொண்டு வரும். ஆனால் எல்லாக் கள்ளுச் சங்கங்களும் இப்பிடி போத்தில்ல கள்ளு அடைக்கிறதில்லை. அதுக்கெண்டு லைசென்ஸ் எடுத்த சங்கங்கள் மட்டும் தான் போத்தில் கள்ளை அடைச்சு, மற்றச் சங்கங்களுக்கு குடுக்கிறவை. அப்பிடியொரு சங்கம் தான் கிளிநொச்சி பனை தென்னைவளச் சங்கம்.

இப்ப மதுவரித் திணைக்களத்தின்ர சட்டப்படி, போத்தில் கள்ளு அடைக்கேக்க ஒவ்வொரு போத்தில்லையும் 'கியூ.அர்' அடிச்ச ஸ்ரிக்கர் ஒட்டவேணும். அதில ஸ்கான் பண்ணினால் எந்தச் சங்கம் அடைச்ச கள்ளு, அது எப்ப அடைச்சது, எவ்வளவு காலம் மட்டும் பாவிக்கலாம் எண்ட விசயங்கள் எல்லாம் தெரியும். இந்த 'கியூ.ஆர்' ஸ்ரிக்கரை காசு குடுத்து மதுவரித் திணைக்களத்திட்ட இருந்து வாங்கித்தான் சங்கங்கள் தாங்கள் அடைகிற கள்ளுப்போத்தில்ல ஒட்டுறவை. மானிப்பாயில உள்ள இன்னொரு சங்கம், கிளிநொச்சிச் சங்கதின்ர போத்தில் கள்ளை வாங்கி தங்கட தவறணையில வித்தது. திடீரெண்டு அந்தப் போத்தில் கள்ளில ஒட்டியிருந்த ஸ்ரிக்கரை யாழ்ப்பாணத்து மதுவரித்திணைக்களக்காரர் வந்து 'ஸ்கான்' பண்ணியிருக்கினம். பார்த்தால் அதில எந்தச் சங்கம் அடைச்ச கள்ளு எண்டு வரவேண்டிய இடத்தில கிளிநொச்சிச் சங்கத்தின்ர பேர் இல்லையாம். ஏதோ ஒரு கொழும்புக் கொம்பனியின்ர பேர்தான் காட்டுதாம். ஒருவேளை மானிப்பாய்ச் சங்கம் கொழும்புக் கொம்பனியில இருந்து கள்ளை இறக்கினதோ எண்டு பார்த்திருக்கினம். அப்பிடியுமில்லையாம்.

அப்ப எப்பிடி இப்பிடிக் கள்ள ஸ்ரிக்கர் வந்தது? கிளிநொச்சிச் சங்கக்காரரும் இப்பிடி களவா ஸ்ரிக்கர் எடுக்கிறதுக்கு சான்ஸ் இல்லை. போனவருசம் அவை கிளிநொச்சி மதுவரித்திணைக்களத்திட்ட 3 லட்சத்து சொச்சம் ஸ்ரிக்கர் காசு குடுத்து வாங்கி, எந்தெந்தத் திகதியில எவ்வளவு போத்தல் அடைச்சதெண்டும், அதில என்னென்ன நம்பர் ஸ்ரிக்கர் ஒட்டினதெண்டும் மதுவரித் திணைக்களத்துக்கும் அறிவிச்சிருக்கினம். அப்ப அங்கையும் தில்லுமுல்லு நடக்கச் சந்தர்ப்பம் இல்லை. கூட்டிக் கழிச்சுப் பார்த்தால், 'இறையே தவறுடையான்' எண்டமாதிரி, கிளிநொச்சி மதுவரித் திணைக்களக் காரரிலதான் கனபேருக்கு டவுட் வந்திருக்கு. எங்கேயோ கொழும்புக் கொம்பனிக்கு அடிச்சு மிஞ்சின ஸ்ரிக்கரை இவை இஞ்ச கொண்டந்து வித்திட்டினமோ எண்டு கனபேர் யோசிக்கினம். பாலுக்கு மட்டுமில்லை கள்ளுக்கும் பூனையைக் காவலுக்கு வைச்சால் கஷ்டம்தான்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிழா

சாவகச்சேரி, பெப்.22
சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவில், தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளன. (ப-9)






வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் பல வருடங்களாக விளையாட்டு மைதானம் இல்லாத போதும், கல்லூரி இந்த வருடம் முதல் மெய்வன்மைப் போட்டியை ஆரம்பித்துள்ளது. (ப-18)

## கால்கோள்விழா

யாழ்ப்பாணம், பெப்.22
யாழ்ப்பாணம், போக்கட்டி அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய உளவளத்துறை ஆசிரிய ஆலோசகர் சே.ஜெயானந்தன், சிறப்பு விருந்தினராக யாழ். சிற்றி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் க.ரொனிகஜன், கௌரவ விருந்தினராக கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சு.ரவிவர்மா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

சர்வதேச ஒசைப்பந்து கிரிக்கெட்;

# இலங்கையணி வீரராக யாழிலிருந்து கதீசன்!



யாழ்ப்பாணம், பெப். 22
பார்வையற்றோருக்கான சர்வதேச ஒசைப்பந்து துடுப்பாட்டப் போட்டியில் இலங்கை அணி வீராகக் களமாட யாழ்.விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவரான காந்தன் கதீசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
டுபாயில் நாளை இடம்பெறவுள்ள இந்தப் போட்டியில் பாகிஸ்தானை எதிர்த்து இலங்கையணி மோதவுள்ளது.
இந்தப் போட்டியிலேயே இலங்கையணி சார்பில் கதீசன் பங்கேற்கவுள்ளார் என்று சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ச)

## முதலையின் வயிற்றில் 70 நாணயங்கள் மீட்பு

முதலை ஒன்றின் வயிற்றிலிருந்து 70 நாணயக் குற்றிகளை மிருக மருத்துவர்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர்.
அமெரிக்காவிலுள்ள மிருகக்காட்சிசாலை ஒன்றிலுள்ள அரியவகை முதலையின் வயிற்றிலிருந்தே அவை மீட்கப்பட்டன.
36 வயதான இந்த முதலை வெள்ளை நிறமும் நீலக் கண்களும் கொண்டது.
மிருகக்காட்சிச்சாலைக்கு வருவோர் வீசிய நாணயங்களே இவ்வாறு சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டன என்றும் மிருகக்காட்சிச்சாலைக்கு வருவோரை நாணயங்களை வீச வேண்டாமெனவும் மிருகக்காட்சிச்சாலை நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. (ச-6)

## செயலூக்க உரை

யாழ்ப்பாணம், பெப்.22
இந்தியாவின் மிகச் சிறந்த செயலூக்க உரைஞர் முனைவர் ஜெயந்தஸ்ரீபாலகிருஷ்ணன் அம்மையாரின் செயலூக்க உரை, யாழ். இந்தியத் துணைத் தூதரகம், றோட்டறிக் கழகம் விருது நகர் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-66)

# 'மேழி 70 விழா'

வவுனியா, பெப்.22
வவுனியா நகர கலாசார மண்டபத்தில் வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் 'மேழி 70 விழா' எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் உடுவை தில்லைநடராசா, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி க.பேர்னாட், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-110)

## மாநாடு

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 4 ஆவது தேசிய மாநாடு 'புதிய பண்பாடு நோக்கி மக்கள் கலை இலக்கியம்' என்ற தொனிப்பொருளில் சர்வோதயம் அமைப்பின் யாழ். பிராந்திய நிலைய மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை, இடம்பெறவுள்ளது.
மேலதிக விவரங்களை அறிந்து கொள்வதற்கு 0772928907 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாநாட்டு ஏற்பாட்டுக் குழு உறுப்பினர் செ.நந்தமோகன் தெரிவித்துள்ளார். (ப)

## கண்ணாடி வழங்கல்

சாவகச்சேரி, பெப்.22
லயன்ஸ் கழகத்தின் சாவகச்சேரி, எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களில் பார்வைக் குறைபாடு உள்ள 500 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளது.
அமரர் மருத்துவர் வேலாயுதபிள்ளை தம்பித்துரையின் குடும்பத்தினரால், சாவகச்சேரி, டச்சு வீதி, ஐங்கரன் மணி மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளது. நிகழ்வுக்கு வருகை தருபவர்கள், கண் பரிசோதனை செய்து அறிக்கை கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

யாழ்ப்பாணம், பெப்.22
கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு, வித்தியாலய மைதானத்தில் அதிபர் நீ.ஜெயரூபன் தலைமையில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக முகாமையாளர் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் தி. கிருஷ்ணதாஸ், சிறப்பு விருந்தினராக ஜே/288 கைதடி வடக்கு கிராம உத்தியோகத்தர் கி.சதீசன், கௌரவ விருந்தினராக லண்டன் சு.கைலாயபிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

## கால்நடைகளைக் கட்டவும்

யாழ்ப்பாணம், பெப். 22
நீர்வேலி, கோப்பாய்ப் பிரதேசங்களில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.
யாழ்.மாவட்டத்தில் பெரும்போக அறுவடைப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு இடையூறு ஏற்படுத்தாது கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்றும் கமக்கார அமைப்புகள் வலியுறுத்தின. (ச-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தை வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**இடபம்:** அனுகூலமான நாள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கடகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தையுடன் ஏற்பட்ட மனவருத்தம் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத் துணைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**மகரம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஆதரவு கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்காது.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சகோதரர் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சட்டங்களால் ஒரு சர்வாதிகாரம்

இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேசம் தொடர்ச்சியாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளில், பயங்கரவாதத் தடைச்சட்டமும் ஒன்று. எனவே சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதற்காக, அந்தச் சட்டத்தை ஒழித்துவிடப் போவதாக இலங்கை அறிவித்தது. அதனைச் சர்வதேசமும் நம்பியது. ஆனால் முன்னைய சட்டத்தை ஒழித்துவிட்டு, அதவிட இன்னும்பாரதூரமானவிடயங்களைஉள்ளடக்கிய புதிய சட்டமொன்றைக் கொண்டுவருவதாக அறிவித்து, சர்வதேசத்துக்கே 'பெப்பே' காட்டியிருக்கிறது இலங்கை. நடைமுறையில்இருக்கும்பயங்கரவாதத்தடைச்சட்டத்தை விடவும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மிக மோசமானது என்று பலராலும் விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றது. சர்வதேச நியமங்களுக்கு அமைவாக சட்டவரைவை மாற்றியமைக்குமாறு அரசாங்கத்துக்கு கூறப்பட்டிருந்தது. குறிப்பாக புதிய சட்டவரைவில்'பயங்கரவாதம்' என்பதற்கான வரைவிலக்கணம் தொடர்பில் தெளிவான வரையறை இல்லாமையால் அதனால் ஏற்படப்போகும் ஆபத்துகள் தொடர்பில் எச்சரிக்கப்பட்டது. ஆனாலும் அவை எவற்றையுமே மாற்றியமைக்காமல் அரசாங்கம் வர்த்தமானியில் சட்டவரைவை வெளியிட்டது. இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 31 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பான தனது தீர்ப்பை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அனுப்பியிருந்த நிலையில், அதனை நாடாளுமன்றத்தில் அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.


அதில் பல சரத்துகள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்பதுடன் சில சரத்துகளுக்குப் பொதுவாக்கெடுப்பு (சர்வஜன வாக்கெடுப்பு) அவசியம் என்றும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. சில சரத்துகள் அரசமைப்புக்கு முரணாக உள்ளன என்று சுட்டிக்காட் டியுள்ள உயர் நீதிமன்றம் தாம் பரிந்துரைத்த திருத்தங்களுக்கு இணங்கினால் அந்த அரசமைப்பு முரண் நீங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இப்போது கேள்வியென்னவெனில், இலங்கை அரசாங்கம் உயர் நீதிமன்றத்தின் கருத்துகளைக் கவனத்தில் எடுக்குமா என்பதுதான். அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பான விவகாரத்தில் அரசாங்கம் உயர் நீதிமன்றத்தின் திருத்தங்களை உள்வாங்கவில்லை என்ற பாரதூரமான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. போதாக்குறைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால், உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை உள்வாங்காமல் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதற்கு சபாநாயகர் சான்றுரைப்படுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழ்க்கை ஏற்பதா ,இல்லையா என்பது தொடர்பான வாதங்கள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில் உயர் நீதிமன்றம் திகதி குறிப்பிடாமல் தனது முடிவை ஒத்தி வைத்திருக்கின்றது.

இதேபோன்று உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு விவகாரத்திலும் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை உதாசீனப்படுத்துவதற்கான வாய்ப்புகளே அதிகம் இருக்கின்றன. ஏனெனில் அரசாங்கம் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு முன்னர் மக்களை அடக்கி ஒடுக்குவதை முழு மூச்சாகக் கொண்டு செயலாற்ற ஆரம்பித்திருக்கின்றது. அதற்குத் தேவையான ஆயுதமாகவே இந்தச் சட்டவரைவுகளை அவசர அவசரமாக நிறைவேற் றுகின்றது.

இப்போதையநிலையில், நிகழ்நிலைக்காப்புச்சட்டத்தை சபாநாயகர் சான்றுரைப்படுத்திய விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுவதைப் போன்று உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகள் உதாசீனம் செய்யப்பட்டமைக்கு உயர் நீதிமன்றம் 'குட்டு' வைக்கவேண்டும். இல்லாவிடின் எதிர்காலத்தில் எந்தவொரு சட்டவரைவுக்கும் உயர் நீதிமன்றம் எத்தகைய வியாக்கியானங்களை வழங்கினாலும் அதை அரசாங்கம் உதாசீனம் செய்வதற்கும், சிலவேளைகளில் அரசமைப்புக்கு முரணான வகையில் சட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கும் வழிகோலக்கூடிய அபாயமும் உண்டு.

இந்தநிலையில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் அதிகம் திருப்திப்படமுடியாது. நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் நிறைவேற்றம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பிலேயே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவின் எதிர்காலமும் தங்கியிருக்கின்றது. சட்டங்களால் ஒரு சர்வாதிகாரக் கட்டமைப்பை இலங்கையில் நிறுவும்வரை ஆட்சியாளர்கள் ஓயப்போவதில்லை என்பதே யதார்த்தம்.




# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு: மகாநாயக்க தேரர்கள் வரவேற்பு

கொழும்பு, பெப். 22

**உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச உள்ளிட்ட அதிகாரிகள், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டவரைவின் பிரதியொன்றை கடந்த திங்கட்கிழமை மல்வத்து மற்றும் அஸ்கிரி மகா மகாநாயக்க தேரர்களிடம் கையளித்தனர்.**

இதற்கு பாராட்டு தெரிவித்த மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர் ஆகியோர் இதனை மேலும் பரிசீலனை செய்து பொது நிலைப்பாட்டை அறிவிக்கவும் இணக்கம் தெரிவித்தனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகச் செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்தும் அதிகாரிகள் மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளித்தனர். (ஒ-இ)

## சுற்றுலாத்துறையும் சரிவடையும் அபாயம்

கொழும்பு, பெப். 22

இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப்பயணிகளுக்குத் தரமான சேவையை வழங்கமுடியாதுள்ளதாக உல்லாசப்பயண அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

'பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து பயிற்சி பெற்ற ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். பெரும் ஆளணிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு நூறு டொலரை செலவிடும் உல்லாசப்பிரயாணி தரமான சேவையை எதிர்பார்ப்பார். ஆனால் தரமான சேவையை வழங்கமுடியாத நிலை தோன்றியுள்ளது' அந்த அதிகாரசபையின் அதிகாரிகள் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளனர். (ஒ-6)

## தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு தேயிலை உற்பத்தி 2 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக பிரதான தேயிலை ஏற்றுமதி முகவர் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. 2022ஆம் ஆண்டு256.04 மில்லியன் கிலோவாகக் காணப்பட்ட தேயிலை உற்பத்தி 2023 ஆம் ஆண்டு 251.84 மில்லியன் கிலோவாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ஒ-6)

## நிலுவைத்தொகைக்கு வட்டி அறவிடும் இ.மி.ச.

சாவகச்சேரி, பெப். 22

மின் பாவனையாளரின் நிலுவைத் தொகைக்கான வட்டி இலங்கை மின்சார சபையால் அறவிடப்படுகின்றது. இது தொடர்பான அறிவித்தல் பாவனையாளர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. (ஒ-9)

## பொன்சேகாவை பெரமுன ஏற்கும்

### திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப். 22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்கு சரத் பொன்சேகா வந்தால் அவரை நாம் வரவேற்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"சரத் பொன்சேகா பரிதாபத்துக்குரியவர். சரத் பொன்சேகா வந்து கதைத்தால், மஹிந்த நிச்சயம் ஏற்றுக்கொள்வார். முடியாது எனக் கூறி அவரை விரட்டமாட்டார் " என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

**நாளை**

**23.02.2024**

**வெள்ளிக்கிழமை**

**மாசி–11**

சுபநேரம் : 06.30 - 08.00

ராகுகாலம் : 11.00 - 12.30

**நாளொரு நல்வார்த்தை**

**ஒரு கதவு மூடப்படும் போது மற்றொரு கதவு திறக்கிறது. ஆனால், நாம் மூடப்பட்ட கதவையே பார்த்துக்கொண்டு திறக்கப்படும் கதவை தவறவிடுகிறோம்**

**– ஹெலன் கெல்லர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் துப்பாக்கிச் சூடுகள் மன்னாரில் மக்கள் போராட்டம்



**மன்னார், பெப்.22**

**மன்னாரில் தொடர்ச்சியாக நடக்கும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பொதுமக்கள் கடந்த திங்கட் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

உயிலங்குளம் பொலிஸ் பிரிவில் உள்ள நொச்சிக்குளத்தில், விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்படும் நிலையில், மதவாச்சி பிரதான வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் ரி-56 ரகத் துப்பாக்கி போன்ற துப்பாக்கியால் சூடு நடத்தியுள்ளனர். அதிர்ஷ்டவசமாக விவசாயி தப்பித்துக்கொண்டார்.

அண்மைக்காலமாக இந்தக் கிராம மக்களிடம் ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதுவரை மூவர் இறந்துள்ளனர். இவ்வாறு ஆயுதங்களைக் கொடுப்பது யார்? என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று உயிலங்குளம் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ-60)

## கிரிக்கெட் மட்டையால் ஒருவர் அடித்துக்கொலை

பெரதெனியாப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறுதலாவையில் கிரிக்கெட் மட்டை மற்றும் தடியால் தாக்கப்பட்டு அதேயிடத்தைச் சேர்ந்த 55 வயதான ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-இ)

## மாற்றுத்திறனாளிகளை புறந்தள்ளி நிதி ஒதுக்கீடு

### பார்வையற்றோர் அறக்கட்டளை நிலையம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு எதுவித நிதி ஒதுக்கீடும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படவில்லை எனப் பார்வையற்றோர் அறக்கட்டளை நிலையத்தின் பொருளாளர் ரங்கடம்பநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாற்றுத் திறனாளிகளுக்கான எவ்வித நலத்திட்டங்களும் இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை.

அதேவேளை, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் சார்பில் கதைப்பதற்கு அனுமதி கோரியும் மாவட்டச் செயலகம் வழங்கவில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மூலமே எமது பிரச்சினை தொடர்பாகத் தெளிவுபடுத்த சந்தர்ப்பம் கிடைத்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-125)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் சாவு!



கொழும்பு, பெப். 22

ராகமவில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறைச்சிக் கடையொன்றுக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். உயிரிழந்தவர் 39 வயதுடைய ஹெட்டி ஆராச்சிகே டொன் சுஜித் என அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, இவர் பாதாள உலகக் குற்றவாளியான 'வெல்லே சாரங்க' வின் உறவினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-இ)

## பழம்பாசிக் கிராமத்துக்கு குடிநீர் வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, பழம்பாசிக் கிராமத்துக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கவேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பழம்பாசிக் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஏனைய கிராமங்களுக்கு 3 ஆண்டுகளாகக் குடிதண்ணீர் கிடைக்கின்றது. ஆனால் 390 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற பழம்பாசிக் கிராமத்துக்கு இதுவரை குடிதண்ணீர் கிடைக்கவில்லை எனக் கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ப-13)

## சமாதான நீதிவான் கல்வித்தகுதி தளர்வு

கொழும்பு, பெப். 22

சமாதான நீதிவான் நியமனத்தைப் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடையவேண்டும் என்ற நிபந்தனை க.பொ.த. சாதாரணதரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சிறப்பு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டு இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அதன்படி க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேல் இல்லாது ஆறு பாடங்களில் (C) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சிவப்பாக ஒளிரும் தாமரைக்கோபுரம்

கொழும்பு, பெப். 22

கொழும்பு தாமரைக் கோபுரம் சிவப்பு நிறத்தில் இன்று ஒளிரவுள்ளது. உலக மூளைக்காய்ச்சல் தினமான இன்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இவ்வாறு ஒளிரவிடப்படவுள்ளது. (ஒ-இ)

## தவறி வீழ்ந்தவர் பரிதாபச் சாவு

கொழும்பு, பெப். 22

புலத்சிங்கள, தெனிகடே சந்தியில் அமைந்துள்ள வீடொன்றின் கூரையை சரிசெய்வதற்கு சென்றவர் மாடியிலிருந்து தவறிவீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தெரணியகல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடையவராவார். (ஒ-இ)

## தேர்தலை நடத்துவதில் விளையாட்டு எடுபடாது

### பெரமுன சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 22

ஜனாதிபதித் தேர்தலுடன் விளையாடமுடியாது.

எனவே, அரசமைப்பின் பிரகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு அது நடந்தாக வேண்டுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவே முடியாது.

இது விடயத்தில் எந்த விளையாட்டும் காட்டமுடியாது. எதிர்வரும் செப்ரெம்பர், ஒக்ரோபர் தேர்தல் நடத்தப்படும். தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின்கீழேயே தேர்தல் நடக்கும். அதில் மாற்றம் வராது.

நாட்டில் தற்போதுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைவிட பலமானதொரு முறைமையே நாட்டுக்குத்தேவை - என்றார். (ச-44)

## தமிழரசு சிக்கல் தொடருமானால் ஜனநாயக த.தே.கூ. பலமடையும்

### வடக்கு முன்னாள் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உட்கட்சி விவகாரம் தீர்க்கப்படாது தொடருமானால், பலர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணையக்கூடிய சாத்தியம் உள்ளது என்று வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். 74 ஆண்டுகளாகப் பயணித்த தமிழரசுக் கட்சியில் முதற்றடவையாக தலைவர் மற்றும் நிர்வாகத் தெரிவில் குளறுபடிகள் இடம்பெற்றமை துரதிஷ்டமான விடயம்.

என்னைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சித் தலைவர் தெரிவில் போட்டியிட்டவர்கள் 10 முதல் 15 ஆண்டுகளுக்குள் கட்சிக்குள் வந்தவர்களே. அவர்கள் தமிழரசுக் கட்சியின் கலாசாரம், பண்புகளில் இருந்து பயிற்றப்பட்டவர்கள் அல்லர்.

தமிழரசுக் கட்சியின் தலைவர், நிர்வாகத் தெரிவு இழுபறி தற்போது நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

இது தமிழ்த் தேசிய எதிர்ப்பாளர்களுக்கு சந்தோசமான, அவர்களை ஊக்குவிக்கும் விடயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழா

கொடிகாமம், பெப். 22

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் செக். பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக் கிளை நிறைவேற்று அதிகாரி பா. அஜீபனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி புஸ்பலதா ஜெகநாதனும், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் வி. எஸ். சுரேஸ் மற்றும் பழைய மாணவரும் தென்மராட்சி கல்வி வங்கி செயற்பாட்டாளருமான ந. சஞ்செயன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-159)

*** *** ***

கிளிநொச்சி, பேராலை சி.சி.த.க. பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-9)

*** *** ***

மிருசுவில், விடத்தற்பளை கமலா சனி வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணையவுள்ள மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அதிபர் இ. நாகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலயக் கணித சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் க. ஶ்ரீகணேசனும் சிறப்பு விருந்தினராக வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியை திருமதி ஞா. கனகராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ப-9)


## நாகபூஷணி திருமண சேவை

**மகளிருக்கு இலவசம் (22/02, 23/02, 24/02)**

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் தனியார் துறையினர் மற்றும் வெளி நாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.
மிகப்பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவுசெய்து உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596, 071 9999 306**

(CS 27981) A-1



## IMMEDIATE VACANCY

Sarukaya Constructions (Pvt) Ltd, is a CIDA C4 Graded construction company with over 15 years Experiences, engaged in Building & Water supply project in Northern province

We are all looking for dynamic and energetic candidates those who posses the following requirements.

**Technical Officer**

- HNDE (Civil), NCT (Civil/QS) or Equivalent
- Minimun 2 Years Experience in Building Projects.
- Flexible and autonomous working, enthusiastic and willing to travel.



Please forward your CV with details to **vacancynsc@gmail.com** with two non related referees in 7 Days

(CS 27960) S-1


## யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வரைவுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 31 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும், அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4 ) பங்கினர், அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள் 2024.02.24 சனிக்கிழமை முற்பகல் 10.00மணி

| இல. | கிளை இல. | தவிசாளர் பெயர் | கிளையின் பெயர் | காலம் | நேரம் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 01 | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் | நாவாந்துறை தெற்கு | 24.02.2024 | 10.00 மணி | சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம், நாவாந்துறை தெற்கு |
| 2 | 02 | திரு.பரமசிவம் தவப்பிரியன் | நாவாந்துறை வடக்கு | 24.02.2024 | 10.00 மணி | சென் மேரீஸ் சனசமூக நிலையம், நாவாந்துறை வடக்கு |
| 3 | 03C | திரு.இராஜசிவம் தனுசன் | முஸ்லிம் தெரு | 24.02.2024 | 10.00 மணி | அறிவொளி சனசமூக நிலையம், ஆறுகால் மடம் |
| 4 | 04 | திரு.சிவலிங்கம் பிரதீபன் | ஓட்டுமடம் | 24.02.2024 | 10.00 மணி | கலைவாணி சனசமூக நிலையம், ஓட்டுமடம் வீதி. |
| 5 | 05 | திரு.பாஸ்கரன் ரூபராஜ் | வண்ணார்பண்ணை | 24.02.2024 | 10.00 மணி | வள்ளுவர் சனசமூக நிலையம், பத்திரகாளி கோவில் வீதி, வண்வட மேற்கு |
| 6 | 07 | திரு.அருளானந்தம் தயாளன் | வெள்ளாந்தெரு | 24.02.2024 | 10.00 மணி | 07 ஆம் கிளைக் கட்டடம், மானிப்பாய் வீதி, வெள்ளாந்தெரு. |
| 7 | 08 | திரு.அந்தோனிப்பிள்ளை ஜேம்சன் | குமரன் | 24.02.2024 | 10.00 மணி | யாழ். கொட்டடி நமசிவாயம் மகா வித்தியாலயம் |
| 8 | 09 | திரு.யோசேப்.ஜெகதாஸ் | கந்தர்மடம் | 24.02.2024 | 10.00 மணி | 09ஆம் கிளைக் கட்டடம், அரசடி வீதி, கந்தர்மடம் |
| 9 | 10 | திரு.ஜெயபாலன்.சதீஸ் | யாழ்பாடி | 24.02.2024 | 10.00 மணி | விநாயகர் மண்டபம் (ரசிக ரஞ்சித சபா மண்டபம்) பொருமாள் கோவிலடி. |
| 10 | 11 | செல்வி விஜயகுமார் நிரோஸியா | நல்லூர் வடக்கு | 24.02.2024 | 10.00 மணி | வன்னியசிங்கம் படிப்பகம், கல்வியன்காடு |
| 11 | 12 | திரு.அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | நல்லூர் மத்தி | 24.02.2024 | 10.00 மணி | 12ம் கிளைக் கட்டடம், நல்லூர். |
| 12 | 13 | திருமதி.சுஜீவன் கஸ்தூரி | கைலாசபிள்ளையார் | 24.02.2024 | 10.00 மணி | நல்லூர் முருகன் சனசமூக நிலையம் |
| 13 | 14 | திரு.சோமசேகரம் தங்கேஸ்வரன் | ஆனைப்பந்தி | 24.02.2024 | 10.00 மணி | நாவலர் கல்வி நிலையம், பருத்தித்துறை வீதி, |
| 14 | 15 | திரு.சிவசிதம்பரம் சிறீதரன் | ஆரியகுளம் | 24.02.2024 | 10.00 மணி | முற்போக்கு வாலிபர் கழகம் ஆரியகுளம் சந்தி |
| 15 | 16 | திருமதி சிவகிருஸ்ணன் ஆரதி | நீராவியடி | 24.02.2024 | 10.00 மணி | சைவபரிபாலன சபை, நீராவியடி |
| 16 | 17 | திருமதி.புவிராஜ் தர்சினி | புங்கன்குளம் | 24.02.2024 | 10.00 மணி | அரியாலை சனசமூக நிலையம் , அரியாலை |
| 17 | 18 | திரு.இரத்தினராசா கஜந்தன் | அரியாலை மேற்கு | 24.02.2024 | 10.00 மணி | ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் |
| 18 | 19 | திருமதி.ந.ஜீவாணி | அரியாலை மத்தி | 24.02.2024 | 10.00 மணி | 19 ஆம் கிளைக் கட்டடம், |
| 19 | 20 | செல்வி சிவபாதம் பிருந்தா | அரியாலை | 24.02.2024 | 10.00 மணி | சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை |
| 20 | 21 | திருமதி.ரஜீவன் சிவகௌரி | கொழும்புத்துறை கிழக்கு | 24.02.2024 | 10.00 மணி | 21 ஆம் கிளைக் கட்டடம் |
| 21 | 22 | திருமதி.சுவேந்திரன் ருத்சாலினி | கொழும்புத்துறை மத்தி | 24.02.2024 | 10.00 மணி | 22 ஆம் கிளைக் கட்டடம் |
| 22 | 23 | திரு.சபாரத்தினம் அருள்நாதன் | பாசையூர் | 24.02.2024 | 10.00 மணி | புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம் |
| 23 | 24 | திரு.மகேசன் நிசாந்தன் | கொய்யாத் தோட்டம் | 24.02.2024 | 10.00 மணி | 24 ஆம் கிளைக் கட்டடம் |
| 24 | 25 | திருமதி.முகிந்தன் கிருஸ்ணவேணி | ஈச்சமோட்டை | 24.02.2024 | 10.00 மணி | 25 ஆம் கிளைக் கட்டடம் |
| 25 | 26 | திரு.இராசரத்தினம் வேல்குமார் | மூத்தவிநாயகர் | 24.02.2024 | 10.00 மணி | மூத்தவிநாயகர் சனசமூக நிலையம் |
| 26 | 27 | திரு.சந்திரசேகரம் விஜயானந்தா | சுண்டுக்குளி | 24.02.2024 | 10.00 மணி | 27 ஆம் கிளைக் கட்டடம் |
| 27 | 28 | திரு.கனகரட்ணம் வக்சன் | ஸ்ரேசன் | 24.02.2024 | 10.00 மணி | யாழ். புனித மரியாள் மகா வித்தியாலயம் |
| 28 | 31 | திரு.தங்கராசா கண்ணதாசன் | மவுண்கார்மல் | 24.02.2024 | 10.00 மணி | புனித கார்மேல் மண்டபம் |
| 29 | 32 | திரு.அரியரத்தினம் வசீகரன் | குருநகர் | 24.02.2024 | 10.00 மணி | 32 ஆம் கிளைக் கட்டடம் |
| 30 | 33 | திரு.சண்முகநாதன் ரதிகுலன் | சென் அன்ரனீஸ் | 24.02.2024 | 10.00 மணி | யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி |
| 31 | 35 | செல்வி அப்பாசாமி பவித்திரா | சின்னக்கடை | 24.02.2024 | 10.00 மணி | புனித யாகப்பர் ஆலயம், குருநகர். |

**நடைமுறைகளைப் பின்பற்றி கூட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
இல 857, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.கி.சந்திரசேகரன்.
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

(CR 41856) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன் கைது 14 நாள்கள் மறியல்

யாழ்ப்பாணம், பெப்.22

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது மல்லாகம் நீதிமன்றம்.

நேற்றுமுன்தினம் சுன்னாகத்தில் யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். 38 வயதான சந்தேகநபரிடம் இருந்து 2 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

(எ-125)

## உடைமையில் கசிப்பு; குடும்பஸ்தர் கைது!

யாழ்ப்பாணம், பெப்.22

உடைமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், 38 வயதான சந்தேகநபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-125)


## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள **ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்** மற்றும் **சமுத்திரா ரேடர்ஸ்** (Hardwere) ஆகிய நிறுவனங்களுக்கான **வேலைவாய்ப்பு. ஆண், பெண்** இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

**077 494 9683, 077 077 6469**

(CS/54052) J-1



## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **உதயராசா எலிசபேத்தம்மா** ஆகிய நான் எனது பெயரை **உதயராசா வேந்தினி** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **உதயராசா வேந்தினி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**உதயராசா வேந்தினி**

(CS/54078) J-1


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**JKS கராத்தே கழகத்தின் ஸ்தாபகர்**
**பொறியியலாளர் Sensei Rossy Harinth**
**அவுஸ்திரேலியாவின் New South wales State**
**கராத்தே அணிக்கு** தெரிவு செய்யப்பட்டுள்ளமையையிட்டு அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர்: JKS மாணவர்கள்**
**யாழ்ப்பாணம், கொழும்பு, முல்லைத்தீவு.**

**T.P.: 077 502 6827**

(cs 54074)(N-1)


## மரண அறிவித்தல்



கலாபூசணம் திருமதி
**கோகிலமணி ஜெகானந்தராஜா**
(ஓய்வு நிலை ஆசிரியை, யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

**தோற்றம் : 27.05.1951** **மறைவு : 20.02.2024**

மூத்த விநாயகர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கோகிலமணி ஜெகானந்தராஜா 20.02.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் - இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பொ.ஜெகானந்தராஜா ( ஓய்வு நிலை ஆசிரியர், யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ) அவர்களின் அன்பு மனைவியும், தேவமணி, காலஞ்சென்ற தேவமதுரம் மற்றும் வரதராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும், மோசஸ், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் றீற்றா, கமலவேணி, தேவராஜா, அழகம்மா, புஸ்பமலர், செல்வராணி, யோகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2024) வியாழக்கிழமை இல.181, மூத்த விநாயகர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**181, மூத்த விநாயகர் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 042 2984.**

(CR/41857) J-1

## அறிவித்தல்

**வவுனியா பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**கிளைப்பொதுச்சபை கூட்ட அறிவித்தல் - 23.02.2024 (வெள்ளிக்கிழமை)**

மேற்படி சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 28ற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையிற்கமைய நடைபெறவுள்ளன.

**திகதி :- 23.02.2024 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் :- காலை 10.00 மணி**

| இல | கிளைக்குழு | கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 01. | மரக்காரம்பளை - 07, கிடாச்சூரி - 09 | பொதுநோக்கு மண்டபம், குகன்நகர், வவுனியா |
| 02. | நெளுக்குளம் - 03, பாரதிபுரம் - 15 | சங்க காரியாலய கீழ் மண்டபம் |
| 03. | பண்டாரிகுளம் - 11, வவுனியாநகரம் - 01 | சங்க காரியாலய மேல் மண்டபம் |
| 04. | செட்டிகுளம் - 04, வீரபுரம் - 16, நேரியகுளம் - 05 பூவரசங்குளம் - 14, நீலியாமோட்டை - 19 | பொதுநோக்கு மண்டபம், செட்டிகுளம், வுவுனியா |
| 05. | மருதங்குளம் - 08, மகாறம்பைக்குளம் -10, நொச்சிமோட்டை - 12 | பொதுநோக்கு மண்டபம், மருதங்குளம், வவுனியா |
| 06. | கந்தபுரம் - 02 | கோயில் மண்டபம், கந்தபுரம் |

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகமை உடைய உறுப்பினர்களுக்கு தவிசாளரினால் கூட்ட அறிவித்தல்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும் அனைத்து கிளைகளிலும் பார்வையிடலாம். கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் குறித்த அறிவித்தலின்படி கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறும் வாக்களிக்கத் தகைமையுள்ள வாக்காளர்களுக்கு அழைப்புக்கடிதம் கிடைக்கப் பெறாவிடினும் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கொண்டு உரிய நேரத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுத் தெரிவுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வரையறுக்கப்பட்ட வவுனியா பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், வவுனியா.**
**தொலைபேசி இல:- 024 2223037**


THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது ஐக்கிய ராச்சியத்தைத் தளமாகக் கொண்ட உலகின் மிகப்பெரிய சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற நிறுவனமாகும் உலகளாவியரீதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் உயிரைக் காப்பாற்றி வருகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலத்தைப் பாதுகாப்பாக மீட்டெடுக்க உதவுகிறோம். மோதலில் பாதிக்கப்பட்டவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதும் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதும் எங்கள் நோக்கம்.

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது சாரதிகளுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப்பதவியின் அத்தியாவசிய சேவைகளாவன. பணிப்பகுதிகளுக்கு அணிகளை கொண்டு செல்வதற்கும் விபத்தொன்றின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகன (AD) ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும். அத்துடன் 2 வருடங்களுக்கு மேலாக கனரக வாகன சாரதி அனுபவமும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவைகளை எதிர்வரும் 28 பெப்ரவரி 2024 புதன்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ, நேரிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ட் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**
**22.02.2024**

(cr.41858) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



64 சக்தி பீடங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மண்டலாபிஷேக நிறைவு உற்சவம் சிவஸ்ரீ ப.மு.பால குமாரக்குருக்கள் தலைமையில் கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ப-27)



யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நலன்விரும்பிகளால் மன்னார் சவேரியார்புரம் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவி களுக்கு சீருடைத்துணிகள்அ ண்மையில் வழங்கிவைக்கப் பட்டன. (ப-9)




யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு நல்லூர்ப் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரால் 'சுயகற்றல் ஊக்குவிப்பு தொகு திப் பாடங்களைத் தெரிவு செய்தல் மற்றும் அதன் முக்கியத்துவம்' தொடர்பான செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ப-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு தம்பகைப் பதி அருள்மிகுபத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீவீரபத்திரப் பெருமாள் தேவஸ்தானத்தின் 5 ஆம் திருவிழாவின் பூந்தண்டிகைத் திருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ப-27)



பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் நீளம் பாய் தல் போட்டியில் தேசிய நிலையில் முதலிடம் பெற்ற, மன்னார் சவேரியார்புரம் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவனுக்கு, யாழ். நெல்லியடி கணபதி அறக்கட்டளையூடாக பாடசாலை அதிபர் த. புஸ்பரத்தினம் தலைமையில் சைக்கிள் வழங்கப்பட்டது. (ப-9)



தெல்லிப்பழை ஸ்ரீ முத்துமாரி அம்மன் மாசிமக இலட்சார்ச்சனை உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நாளை வெள்ளிக்கி ழமை வரை நடைபெறும். எதி ... ் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாசிமகத் திருவிழா இடம்பெ ... ளது. (ப-66)

# மரண அறிவித்தல்

தோற்றம்
25
03
1946



மறைவு
20
02
2024

## சிவராசா நாகபூசணி

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா நாகபூசணி அவர்கள் கடந்த (20.02.2024) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் பவளம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற கிட்டுனர் இராசம்மா தம்பதியினரின் மருமகளும், அமரர் சிவராசாவின் பாசமிகு மனைவியும், வரதராசா (இத்தாலி), வசந்தி, தமயந்தி, செல்வந்தி, ஆனந்தராசா (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தயாரும், கலைச்செல்வி (இத்தாலி), குமாரசாமி, சுரேஸ், பவித்திரா (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சதுர்சன், யதுநந்தன், கரிஷினி, பிரிதிகன், ஆரபி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (22.02.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில், அம்மன் வீதி, பகுத்தறிவக லேன், திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அஸ்வெசும’ நலன்புரி பதிவு ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 22

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் ‘அஸ்வெசும’ நலன்புரி உதவித் திட்டத்தின் 2 ஆம் கட்டப் பதிவுக்கான படிவங்கள் அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்களில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை ‘அஸ்வெசும’ நலன்புரி உதவித் திட்டத்துக்கு விண்ணப்பிக்காத பொதுமக்கள் படிவத்தைப் பெற்று மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் படிவத்தைப் பதிவு செய்ய வருபவர்கள் கட்டாயம் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## மருத்துவமனை வளாகத்தை துப்புரவாக்கக் கோரிக்கை!

சாவகச்சேரி, பெப்.22

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் நுளம்புப் பெருக்கம் அதிரித்துள்ளது என்றும், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அயலில் உள்ள குடும்பங்கள் மருத்துவமனை நலன்புரிச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்து ள்ளன.

மருத்துவமனை வளாகம் புற்கள்நிறைந்துள்ள நிலையில், அயல் வீடுகளில் உள்ள பலருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. மருத்துவமனையில் டெங்குத் தொற்றாளர்களுக்கு உதவியாக நிற்பவர்களும் டெங்குத் தொற்றுக்குள்ளாகின்றனர். மருத்துவமனை நிர்வாகத்திடம் கூறினால் அவர்கள் புகையடிக்கின்றனர். ஆனால் நுளம்புப் பெருக்கம் கட்டுப்படுவதாக இல்லை.

பொது அமைப்புகளின் உதவி கோரி மருத்துவமனை வளாகத்தைத் துப்புவரவாக்கவேண்டும்என்று அயலில் உள்ள குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (எ-9)

# பிளாஸ்ரிக் அற்ற பிரதேசமாக நயினாதீவை மாற்றவேண்டும்

## ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 22

**நயினாதீவை பிளாஸ்ரிக் அற்ற முன்மாதிரிக் பிரதேசமாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராயும் சிநேகபூர்வ கலந்துரையாடல், உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் எஸ். பிரணவநாதன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நயினாதீவில் உள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து கிராம மக்களால் எடுத்துக் கூறப்பட்டது. பாடசாலைகளுக்கான தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு வடக்குமாகாணக் கல்வி அமைச்சின் செயலருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை போக்குவரத்து, குடிநீர் வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கும் தீர்வு காண்பதற்கான திட்டவரைவை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டார். தீவகமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், புலம் பெயர் அமைப்புகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென ஆளுநர் குறிப்பிட்டார். இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்திசெய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது.

இன,மத பேதமின்றி நயினாதீவு மக்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தமையானது இந்தப் பிரதேசத்தை சிறந்த முன்மாதிரியாக மாற்றுவதற்கான நல்லதொரு ஆரம்பம் என ஆளுநர் தெரிவித்தார்.

மக்களுடனான கலந்துரையாடலின் பின்னர் நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டப நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிய உணவிலும் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர். தீவிலுள்ள மதவழிபாட்டுத்தலங்களுக்கும் சென்று மதத்தலைவர்களுடனும் ஆளுநர் கலந்துரையாடினார்.

இதேவேளை ஆளுநரால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை உடனடியாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், நயினாதீவை முன்மாதிரித் தீவாக மாற்ற தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்து அதற்குரிய திட்டவரைபை விரைவில் ஆளுநரிடம் சமர்ப்பிப்பதாகவும் வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் நயினாதீவு மக்களிடம் உறுதியளித்தார். (ஒ-26)

## தேராவில் குளத்துநீர் வெளியேற்றம்

முல்லைத்தீவு , பெப். 22

புதுக்குடியிருப்பு தேராவில் குளத்துநீரை வெளியேற்றும் முதற்கட்டப் பணிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாதங்களாக தேராவில் குளத்து நீர் நிரம்பி வழிந்து வருகிறது. குளத்துநீர் மக்களின் குடிமனைகளுக்குள் புகுந்துள்ளதால் இதுவரை 17 குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்துள்ளன.

இந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் முயற்சியால் குளத்துநீரை, தேக்கங்காட்டு வீதியில் குறுக்கறுத்து பாலம் அமைத்து வெளியேற்றுவதற்கான திட்டவரைபு முன்மொழியப்பட்டு அரச சார்பற்றநிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து குளத்துநீரை வெளியேற்றும் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-19)

## சுண்ணாம்புச்சூளை வீதியைச் சீரமைப்பதில் சிக்கல்!

### மக்கள் போராட்டம்

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள சுண்ணாம்புச்சூளை வீதியின் புனரமைப்புக்கான நிதி பிற அபிவிருத்திக்காக மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் முன்பாக கடந்த திங்கட்கிழமை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

பல ஆண்டுகளாக சுண்ணாம்புச்சூளை வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றோம். கடந்த காலத்திலும் குறித்த வீதியை பிரதேசசபை புனரமைக்க முயன்றபோதும் போதியளவு நிதியின்மையால் கைவிடப்பட்டது. இந்தநிலையில் வீதிக்கென தற்போது ஒதுக்கப்பட்ட நிதி பிரதேச செயலக மட்டத்தில் மாற்றப்பட்டுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன், புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டுத் திட்டத்தில் 22.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்த நிதி புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் கீழுள்ள 7 வட்டாரங்களுக்கும் சனத்தொகை அடிப்படையிலும் பரப்பளவு அடிப்படையிலும் அபிவிருத்திக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மக்களின் கோரிக்கைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும்- என்றார். (ச-19)



## நடவடிக்கை முடக்கம்

சாவகச்சேரி, பெப். 22

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் நடவடிக்கைகள் முடங்கியுள்ளன. இது தொடர்பான அறிவித்தல் மன்றத்தின் உப தலைவரால் மன்ற அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-9)

## சந்திப்பு

இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின் பொருளாதார மற்றும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரப் பேரவை பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ஒ-125)

## குளத்தையும், நிலத்தையும் காப்பாற்றுங்கள்

கிளிநொச்சி, பெப். 22

இரணைமடுக் குளத்தின் கீழ்ப் பகுதியில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வால் இரணைமடுக் குளத்துக்கும் அதனைச் சூழவுள்ள வயல் நிலங்களுக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. குளத்தையும் நிலத்தையும் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுங்கள் என உரிய தரப்பினரிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோரமோட்டை ஆற்றுப்பகுதியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் அண்மைக் காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுக்கடங்காது அதிகரித்துள்ளது. இது தொடர்பில் உரிய தரப்பினருக்குத் தகவல் வழங்கும் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதோடு, அவர்களின் வீடுகளுக்குள் பட்டாசுகளைக் கொளுத்தி எறிந்து எச்சரிக்கை விடும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடதக்கது. (ஒ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணப்...

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் கூடியது. அப்போது பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதயகம்மன்பிலவால் இந்தத் திருத்தச் சட்டவரைவு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்ட வரைவாக இது கருதப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் முலம்மில் இந்தத் திருத்தச் சட்டவரைவை வழிமொழிந்தார்.

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் பொலிஸ் அதிகாரம் பயங்கரமானது. எனவே, மாகாணசபை முறைமையில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை நீக்குவது தேசியவாதிகளின் 37 வருடகால கனவாக இருந்து வருகின்றது. அந்தக் கனவை நனவாக்கும் வகையில் மாகாணசபை முறைமையில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கான அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை எம்மால் முன்வைக்க முடிந்தது" - என்று அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது உதயகம்மன்பில குறிப்பிட்டிருந்தார்.

"சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் நாளில் இருந்து 14 நாள்களுக்குள், இந்தச் சட்டவரைவு தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் உயர்நீதிமன்றத்தில் அதைச் சவாலுக்குட்படுத்த முடியும். தமிழ்ப் பிரிவினைவாதிகள் இதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்லக்கூடும்" எனவும் அவர் கூறியிருந்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைத்த பின்னர், அதன்பிரகாரம் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றமுடியும், அதற்கான பெரும்பான்மையும் கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார். (அ-எ-44)

## சிறார்கள்...

மாக வைத்திருந்தது. ஆனால், இன்று சர்வசாதாரணமாக குற்றங்கள் தலைவிரித்தாடுகின்றன.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தலைமன்னார் பகுதியில் 10 வயது பாடசாலைச் சிறுமி, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். 52 வயதான கொடூரனே இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளார். இவருக்கு மரணதண்டனை விதிக்கப்படவேண்டும் எனக் கோரி மக்கள் அமைதி வழியில் போராட்டம் நடத்தினர். 1990களில் தமிழீழ விடுதலைப் புலிகளின்நிர்வாகம் இருந்தபோது, 1993ஆம் ஆண்டு 13 வயதுச் சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வழக்கு அவர்களின் நீதிமன்றத்துக்கு வந்தது. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புச் சந்தியில் குற்றவாளிக்கு மக்கள் முன் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. 2009ஆம் ஆண்டுவரை எங்களுடைய பிரதேசத்தில் சிறார்களுக்கு, பெண்களுக்கு மிகப்பெரிய பாதுகாப்பாக விடுதலைப்புலிகள் இருந்தனர். குற்றமிழைப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை என்ற தீர்ப்பின் ஊடாக, குற்றங்கள் அற்ற பிரதேசமாக இருந்தது. இன்று சர்வசாதாரணமாகக் குற்றங்கள் நடக்கின்றன. சிறார்களின் கழுத்தை நெரித்துக் கொலை செய்யும் அளவுக்கு நாட்டு நிலைமை உள்ளது. பொருளாதார மறுசீரமைப்பு மட்டுமல்ல நடைமுறையில் உள்ள இப்படியான பிரச்சினைகளுக்கும் தீர்வு அவசியம். நாட்டில் நீதி அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு என்பன இருக்கின்றனவா? என்ற சந்தேகம் உள்ளது - என்றார். (அ-எ-44)

## ஈரான்...

கிழமை தெரிவித்தார். இப்ராஹீம் ரைசியின் கால அட்டவணை இறுக்கமாக உள்ள போதிலும் அவரின் பயணம் ஈரானுக்கு முன்னுரிமையாக இருக்கும் என அமீர் அப்துல்லாஹியன் கூறினார்.

இலங்கையுடன் ஈரானின் உறவுகளை மேம்படுத்துவதற்கான முயற்சியின் ஒரு கட்டமாக அமீர் அப்துல்லாஹியன் கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்தடைந்ததுடன், ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் உட்பட அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் அவர் பேச்சுகளை நடத்தியிருந்தார்.

அதேவேளை, இலங்கையின் அழைப்பை ஏற்று ஈரானின் ஜனாதிபதி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டால் அது இராஜதந்திர ரீதியில் பல்வேறு நெருக்கடிகளை இலங்கைக்கு ஏற்படுத்தும் என சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். பூகோள அரசியலில் ஈரானும் அமெரிக்காவும் பரம எதிரிகளாகும். பலஸ்தீன விவகாரத்தில் இந்த முறுகல்கள் மேலும் முற்றியுள்ளன. இந்த நிலையில், ஈரானுக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்புக் குறித்து அமெரிக்கா கவலை கொண்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## சாதனை...

ஹரிகரன் தன்வந்த் தற்போது திருகோணமலையில் வசிக்கின்றார். தனது சாதனை முயற்சி தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

" ஈ.சி.டி. திருகோணமலை இந்துக் கல்லூரியில் நான் எட்டாம் தரத்தில் கற்கின்றேன். நீச்சல் மூலம் பாக்கு நீரிணையைக் கடந்த 6 ஆவது நபர் என்ற சாதனையைப் படைக்க வேண்டும் என்பது தான் எனது இலட்சியம். இளைஞர்கள் மட்டத்தில் அதிகரித்துவரும் போதைவஸ்து பாவனையில் இருந்து மீள்வதற்கான விழிப்புணர்வூட்டும் வகையில் இந்த நீச்சல் சாதனை முயற்சியை முன்னெடுக்கின்றேன்.

அத்துடன் கடற்பரப்பில் வெற்று பிளாஸ்ரிக்கழிவுப் பொருள்களை அகற்றி, கடற்பரப்பைச் சுத்தமாக வைத்திருப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல், உயிர்வாழ் உயிரினங்களின் கடல்வாழ் ஆமைகளைப் பாதுகாத்தல், முருகைக்கற் பாறைகளின் முக்கியத்துவத்தை பேணுதல் என்பவை தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்த முயற்சியை எடுத்துள்ளேன்" என்று சிறுவன் ஹரிகரன் தன்வந்த் தெரிவித்தார். (அ-எ-27-26)

## கச்சதீவுத்...

எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, தமிழக மீனவர்களின் போராட்டம் காரணமாக கச்சதீவுக்கு யாத்திரிகர்கள் செல்வதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஆயினும் கச்சதீவுத் திருவிழாவில் கலந்துகொள்ள முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம் என்று தமிழகத்தின் இராமேஸ்வரம் பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

மறுபுறம், வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்கும் வகையில் 17 நாட்டுப் படகுகளில் 300 மீனவர்கள் கச்சதீவுத் திருவிழாவுக்குச் செல்வர் என்று தமிழ்நாடு நாட்டுப் படகு உரிமையாளர் சங்கத் தலைவர் இராயப்பன் தெரிவித்துள்ளார்.

இந்த முரண்பாடான தகவல்களால் இந்தியாவைச் சேர்ந்த பக்தர்கள் குழப்பமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-ஓ-125-66)

## யாழ். பல்கலை...

மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே பாய்ந்த நாய் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. வீட்டிலிருந்து நீர்வேலிச் சந்தை நோக்கிப் பயணித்தபோதே விபத்து நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

விபத்தில் சிக்கிய இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100-66-26)

## பலாலி...

வைத்து யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்தவின் விசேட வழிகாட்டலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எட்டுப் பேர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலும், வன்முறைக் கும்பல் ஒன்றின் அங்கத்தவர் என்ற குற்றச்சாட்டிலும் சந்தேகநபர் தேடப்பட்டு வந்தார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர் இந்தியாவில் இருந்து திருப்பியனுப்பப் பட்டிருந்த நிலையில், பலாலி சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-எ-26-125)

## கொரோனாத்...

தெரியவந்துள்ளது. முன்னணி மருந்து உற்பத்தி நிறுவனங்களான பைஸர், அஸ்ட்ராசெனகா போன்ற நிறுவனங்களால் விநியோகிக்கப்பட்ட தடுப்பூசிகள் மூலம் பல்வேறு நோய்கள் ஏற்படலாம் எனத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உலக சுகாதார நிறுவனம் சர்வதேச ரீதியாக மேற்கொண்ட ஆய்விலேயே இந்த விடயங்கள் வெளிவந்துள்ளன. உலகம் முழுவதும் 99 மில்லியன் பேர் கொரோனாத் தடுப்பூசி ஏற்றியமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சனத்தொகையில் 71 வீதமானோர் ஒரு தடுப்பூசியாவது ஏற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-6)

## மனிதப்...

என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான சாதக நிலைமைகள் தொடர்பாகவும், முன்னெடுக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பாகவும் இன்றைய வழக்கில் ஆராயப்படவுள்ளது.

அகழ்வு நடவடிக்கைகளுக்காக 5.7 மில்லியன் ரூபா நிதியமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அதன் ஒருபகுதி முன்னைய அகழ்வு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் அகழ்வுக்காக 13.7 மில்லியன் ரூபா மாவட்டச் செயலகத்திடம் கோரப்பட்டுள்ளது. முதலாம் திகதி அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-எ-125)

## சபாநாயகருக்கு...

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு;

ஏதேனும் சட்டவரைவு அல்லது ஏதேனும் சட்டவரைவின் ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரணாக உள்ளன என உயர்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்தால் அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து அத்தகைய சட்டவரைவு அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்கு - பரிந்துரைக்கு அமையவே நிறைவேற்றப்படவேண்டும்.

நிகழ்நிலைக் காப்புச்சட்ட விவகாரத்தில் ஆளுங்கட்சியினர் 9 சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு முரணாக தமது சொந்தத் தேவையின் நிமித்தம் நிறைவேற்றும் செயலில் ஈடுபட்டனர். அவ்வாறான குறைபாடு ஏற்பட்டுள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நிகழ்நிலை காப்புச்சட்டம் இந்தச் சபையில் சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு நடக்கமுடியாது.

சபாநாயகருக்கு சரியான அறிவுரைகளை வழங்குவது அதிகாரிகளினதும் பொறுப்பாகும். இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும். இந்தக் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும் - என்றார். (அ-எ-44)

## மோ.சைக்கிள்...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் பணிபுரியும் ஒருவர் காரைநகரில் உள்ள தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, வாகனம் ஒன்றில் வாள்களுடன் வந்த கும்பல் அவரை வழிமறித்தது என்றும், இளைஞர் தப்பியோடிய நிலையில் அந்தக் கும்பல் மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்தது எனவும் கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்த கும்பல் தப்பிச் சென்றுள்ள நிலையில், காரைநகர்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-66-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 253 சாரணர்கள் தேசிய ஜம்போறிக்கு

இலங்கை சாரணர் சங்கத்தின் 10 ஆவது ஜம்போறி மாநாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 253 சாரணர்கள் பங்குபற்றவுள்ளனர்.

10ஆவது ஜம்போறி மாநாடு திருகோணமலையில் நேற்று புதன்கிழமை 21ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் யாழ். மாவட்டத்தில் 11 பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 253 சாரணர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

சாரணர்களை கௌரவித்து அனுப்பி வைக்கும் நிகழ்வு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் யாழ். பழைய பூங்காவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ப-27)



கோப்பாய்ப் பிரதேச மருத்துவமனை நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கைக்கமைய, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகம் 5 இலட்சத்து 65 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான மருந்துப் பொருட்களை கோப்பாய்ப் பிரதேச மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்துள்ளது. (ப-66)

## கசிப்புடன் கைது

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு சுடலைக் குளத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைவாக நேற்றுமுன்தினம் சுற்றிவளைப்பை மேற்கொண்ட இராமநாதபுரம் பொலிஸார் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 82 லீற்றர் கசிப்பும், 880 லீற்றர் கோடவும் பறிமுதல் செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-113)

# கால்கோள் விழா

யாழ்ப்பாணம், பெப்.22

கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின், 2024 ஆம் ஆண்டு தரம்-1 இல் சேர்ந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா தரம்-2 இல் கற்கும் மாணவி சிவனேஸ்வரன் ஜனுஸ்கா தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது நிகழ்வில் விருந்தினர்களாகக் கரம்பைக்குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.சுதாகர், பழைய மாணவர்களான யோ.பகீரதன், ச.நகுலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)

*** *** *** ***

யாழ்ப்பாணம், பெப்.22

குடமியன் அ.த.க. பாடசாலையின், 2024 ஆம் ஆண்டு தரம் ஒன்றில் சேர்ந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா குறித்த பாடசாலை அதிபர் கா.நிமலநாதன் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-159)

# மண்டபத்திறப்புவிழா

யாழ்ப்பாணம், பெப்.22

ஊரெழு கணேச வித்தியாசாலையில் ஊரெழு நண்பர்கள் அமைப்பின் உதவியுடன் ஊரெழு அபிவிருத்திச் சங்கத்தால் புனரமைக்கப்பட்ட பிரதான மண்டபத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ப-66)


## காணி விற்பனைக்கு

மாணிப்பாய் - கைதடி வீதி முகப்புடன் ராஜவீதி சந்தி, உரும்பிராய் கிருஸ்ணன் கோவிலடியில் 06 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

(வலிகாமம் வடக்கு இடம் பெயர்ந்தோர தங்கிய இடம்)

தொடர்புகளுக்கு:-

077 353 4854, 074 338 2978



## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 986 5457


# மரண அறிவித்தல்



## சிவபாதசிங்கம் சாவித்திரிதேவி

வேம்போலை, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசிங்கம் சாவித்திரிதேவி நேற்றுமுன்தினம் (20.02.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சவுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாதசிங்கம் (சண்முகம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சத்தியபாமா, பத்மாதேவி, செல்வரட்ணம் மற்றும் யோகம்மா, இராஜவரோதயம் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்), சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவாஜினி (கொழும்பு), சிவாஸ்கரன் (ஆசிரியர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு), சிவானந்தி, சிவாஞ்சலி (கனடா), சிவாகரன் (ஆசிரியர், மயிலணி மகாவித்தியாலயம், சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரகுமாரன் (சரஸ்வதி ஸ்ரோர்ஸ், கொழும்பு), யாழினி, சிவபாலன் (பரணி கிறீம் ஹவுஸ், கொக்குவில்), வசீகரன் (கனடா), புரந்தரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான, பாலசுப்பிரமணியம், இராசமணி, கமலாதேவி, நடராசா, செல்லப்பாபிள்ளை மற்றும் அன்னலட்சுமி, வேலாயுதபிள்ளை, மகேந்திரலிங்கம், கிரிஜாலினி, ரஞ்சிதபூபதி, சத்தியவதி ஆகியோரின் மைத்துனியும், வீஸ்வதீப் (Monash University Australia), சௌமியா (Deakin University, Australia), ஜனுயன், விதுஜன் (கனடா), கவிஸ்கா, அபிஷன், ஆருட்சன், அக்ஷிகா, அஷ்விகா, அஸ்விந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வேம்போலை
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 25.01.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் துரைஐயா மகாலிங்கம்
(மினி மகாலிங்கம்)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.02.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (24.02.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

958/47, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 929 3573



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org